# அரக்கோணம் நகராட்சி
## சாதாரண நகர மன்ற கூட்ட அறிவிப்பு

கூட்ட எண்.27 நாள். 25.08.2023.

பொருள் : நகர மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள்: 31.08.2023 வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு சாதாரண கூட்டம் நடைபெறுதல் – அறிவித்தல் – சம்மந்தமாக.

&&&&&

அரக்கோணம் நகராட்சி நகரமன்றம் சாதாரண கூட்டம் 31.08.2023 வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் நகரமன்ற கூடத்தில், நகரமன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் சாதாரண கூட்டத்தில் நகரமன்ற துணை தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த

(ஒம்)/–திருமதி.லட்சுமி பாரி,
நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி

இடம் : அரக்கோணம் நகராட்சி

நாள் :25.08.2023.

<u>பொருள் எண். 1</u>

நகராட்சி ஆணையர் (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீலை–2023ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.436 நாள். 31.08.2023**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது,**

<u>பொருள் எண். 2</u>

இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்பத்தூர், அவர்களின் கடிதம் ந.க.எண். 399/2023/A2, நாள் 06.07.2023–ல் கடிதத்தில் அரசாணை நிலை எண். 36 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.04.2021–ல் தெரிவித்துள்ளவாறு முதல் நிலை நகராட்சிகள் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு ஆண்டு தோறும் பங்குத் தொகையாக ரூ. 75000/–ஐ செலுத்துமாறு கோரப்பட்டுள்ளது. அதன்படி 2023–2024 ஆம் ஆண்டிற்கான அரக்கோணம் நகராட்சியின் பங்குத் தொகை ரூ. 75000/– னை மேற்படி கடிதத்தில் ஒரு வாரகாலத்திற்குள் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, அவசர அவசியத்தை முன்னிட்டு பொதுநிதியிலிருந்து தொகை செலுத்த மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u> அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொதுநிதியிலிருந்து தொகை ரூ. 75000/–னை செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.437 நாள். 31.08.2023**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

<u>பொருள் எண். 3</u>

அரக்கோணம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடுகள், காலி மனைகள் மற்றும் வணிக வளாகங்கள் கொசு புழுக்கள் உற்பத்திக்கு ஏதுவாக உள்ள கலன்கள், தேவையற்ற டயர்கள், உடைந்த பொருட்கள் அப்புறப்படுத்துதல் மேலும் தண்ணீர் தேக்கி வைக்க கூடிய கலன்கள், கீழ்நிலை நீர் தேக்க தொட்டிகள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கொசு புழுக்கள் உருவாகாமல் தடுக்கவும் தொடர்ந்து கண்காணிக்கவும், மேலும் காய்ச்சல் கண்ட நபர்களின் விவரங்களை சேகரித்து நடவடிக்கை மேற்கொள்ளவும் செப்டம்பர்–2023 முதல் டிசம்பர்–2023 வரை முடிய 4 மாதங்களுக்கு 18 நபர்கள் களப்பணியாளர்களை (DBC) மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயித்துள்ள தினக்கூலி அடிப்படையில் வெளிக்கொணர்வு ஒப்பந்ததாரர் மூலமாக பணிகளை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.9.00 இலட்சத்தில் மேற்கொள்ளவும், பொதுமக்களின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு நகர மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 23.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றத்தின் அனுமதிக்கும், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதக்கு வைக்கப்படுகிறது.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு | M/S Sri Vari Enterprises Arakkonam | M/S Sri Sai Ram Enterprises Tiruvallur |
|---|---|---|---|---|
| | | | (நபர் ஒருவருக்கு) | (நபர் ஒருவருக்கு) |
| 1. | டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை பணிகளுக்கு 18 களப்பணியாளர்கள் (DBC) விநியோகம் செய்தல். | 9.00 | 329 மற்றும் (EPF + ESI | 345 மற்றும் (EPF + ESI |

மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/S ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1245/2022/எச்1)

**தீர்மானம் எண்.438** **நாள். 31.08.2023**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

**<u>பொருள் எண். 4</u>**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் கடை எண்.20ன் குத்தகைதாரர் திரு.P.ராகேஷ்பாபு (எ) ரமேஷ்பாபு என்பவரால் அரக்கோணம் நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P.NO.3577/2023 தொடர்பாக 09.02.2023 அன்று வழங்கப்பட்ட தீர்ப்புரையில் மனுதாரரின் கோரிக்கையான கடை வாடகையை தள்ளுபடி செய்யவும், கடை சாவியினை ஒப்படைக்கவும் கோரப்பட்டதனை பரிசீலனை செய்யுமாறு உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து, இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் ந.க.எண். 844/2018/அ1, நாள்.06.04.2023 ன் மூலம் குத்தகைதாரர் திரு.P.ராகேஷ்பாபு பெயரிலுள்ள கடைக்கான வாடகை நிலுவை தொகை ரூ.2,65,856/- நிலுவையின்றி நகராட்சி கருவூலத்தில் செலுத்தி குத்தகை உரிமத்தினை புதுப்பித்துக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. அவ்வறிவிப்பினை ஆட்சேபித்து குத்தகைதாரர் திரு.P.ராகேஷ்பாபு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.NO.13729/2023 மற்றும் W.M.P.13411/2023-ல் வழக்கு தொடரப்பட்டு 16.06.2023 அன்று கீழ்க்கண்டவாறு தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது.

In the light of the above discussion. The impugned proceedings Na.Ka.No.844/2018/A1, Dated 06.04.2023 is hereby quashed. There shall be a direction to the 2nd Respondent to rework the Rental arrears after waiving the lease rental for the period when the petitioner was illegally dispossessed. Immediately on the payment of the reworked rental arrears by the petitioner, the lock and seal shall be removed and the petitioner shall be permitted to carry on with the business. It goes without saying that the petitioner shall comply with the other conditions imposed by the 2nd Respondent and also pay the rents every month without fail.

கடை ஆக்கிரமிப்பாளர்களான திரு.Mஆனந்தன் மற்றும் திரு.B.ரவிச்சந்திரன் ஆகிய நபர்களின் இருப்பிடப்பகுதியினை அறிய இயலாததால் டிசம்பர் - 2018 முதல் மார்ச்- 2020

வரை நிலுவையிலுள்ள கடை வாடகை தொகை ரூ.2,65,856/-ஐ வழக்கின் தீர்ப்புரையின் படி வசூல் செய்ய இயலாத நிலை உள்ளது.

அ) மேலும் உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி, திரு.P.ராகேஷ்பாபு (எ) ரமேஷ்பாபு என்பவர் செலுத்த வேண்டிய தொகை தொடர்பாக ஆய்வு செய்ததில் அன்னார் வேறு தொகை ஏதும் செலுத்த கேட்பு எழுப்ப இயலாது, இந்நிலையில், டிசம்பர் – 2018 முதல் மார்ச்– 2020 வரை நிலுவையிலுள்ள கடை வாடகை தொகை ரூ.2,65,856/-ஐ நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று கணினி கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

ஆ) புதிய பேருந்து நிலையம் கடை எண்.20-க்கு 2017-2018 ல் நிர்ணயிக்கப்பட்ட வாடகைரூ.14,081/- இதன்படி மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை வாடகை 15 விழுக்காடு உயர்வு செய்யப்பட்டால் தற்போதைய வாடகை ரூ.18,622/- (+ GST) என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி கடைக்கு வைக்கப்பட்டுள்ள Lock& Seal ஐ அகற்றி மேற்படி வாடகைக்கு திரு.P.ராகேஷ்பாபு அவர்களுக்கு ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

அ) டிசம்பர் – 2018 முதல் மார்ச்– 2020 வரை நிலுவையிலுள்ள கடை வாடகை தொகை ரூ.2,65,856/-ஐ நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று கணினி கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ஆ) மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண். 844/2018/அ1)

**தீர்மானம் எண்.439** **நாள். 31.08.2023**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

**<u>பொருள் எண். 5</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 36 வரையுள்ள வரிவிதிப்புதாரர்களுக்கு சொத்துவரி பெயர் மாற்றம். காலிமனை வரி விதிப்பு மற்றும் புதிய சொத்துவரி விதிப்பு செய்யவும் நகராட்சியின் நிர்வாக நலன் கருதி நகராட்சியின் வருவாயை மேம்படுத்தவும் ஆய்வுக் கட்டணம் கீழ் கண்டவாறு நிர்ணயம் செய்து மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விண்ணப்ப படிவங்களின் விவரம் | நிர்ணயம் செய்யப்பட்ட ஆய்வுக்கட்டணம்.ரூ |
|---|---|---|
| 1 | சொத்துவரி பெயர் மாற்ற ஆய்வுக்கட்டணம் | சொத்தின் பத்திரத்தின் மதிப்பில் 0.10 சதவிதம் |
| 2 | சொத்துவரி விதித்தல் ஆய்வுக்கட்டணம் | ரூ 500/- |
| 3 | காலிமனை வரிவிதிப்பு ஆய்வுக்கட்டணம் | ரூ 500/- |

<u>அலுவலக குறிப்பு :-</u>

நகராட்சியின் நிர்வாக நலன் கருதியும், நகராட்சியின் வருவாயை மேம்படுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 405/2021/அ1)

**தீர்மானம் எண்.440** **நாள். 31.08.2023**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

<u>பொருள் எண்.6</u>

அரக்கோணம் நகராட்சியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் 25.08.2023 அன்று துவங்க உள்ளதால் ஒருங்கிணைந்த சமையற்கூடத்தில் உணவு பட்டியல், வழிதடவரைபடம் (Route Map) 12 பள்ளிகளின் பெயர் பலகைகள், மற்றும் விழா நடத்தப்படும் இடத்திற்கான பேனர்கள் ஆகியவைகள் தயார் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ எ. ண் | விவரம் | தேவன் பிரதர்ஸ் ஆர்ட்ஸ், அரக்கோணம் ஒன்றின் விலை ரூ (Included GST 18%) | Infinity Signage System திருவள்ளூர் ஒன்றின் விலை ரூ (Included GST 18%) | இயைள டிஜிட்டல் காஞ்சிபுரம் ஒன்றின் விலை ரூ (Included GST 18%) |
|---|---|---|---|---|
| 1. | 5 X 2.5 Vinyl With 5mm Foam Board And Metal Frame (12 Nos) | 39,000 | 39,300 | 39,600 |
| 2. | 5 X 2.5 Vinyl With 5mm Foam Board (1 Nos) | 2,000 | 2,150 | 2,125 |
| 3. | 5 X 3 Vinyl With 5mm Foam Board (1 Nos) | 2,400 | 2,580 | 2,550 |
| 4. | 4 X 2 Vinyl With 5mm Foam Board (1 Nos) | 1,280 | 1,376 | 1,360 |
| 5. | 6 X 4 Fiex Only (1 Nos) | 550 | 560 | 560 |
| | GST 18% ரூ | 8,141 | 8,274 | 8,315 |
| | மொத்தம் ரூ | ரூ.53,371 | ரூ.54,240 | ரூ.54,510 |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய தேவன் பிரதர்ஸ் ஆர்ட்ஸ், அரக்கோணம், அவர்களுக்கு பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் முன்அனுமதி எதிர்நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும், அதற்கான தோராய செலவினம் ரூ.53,371/-யினை இந்நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவதற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் முன் அனுமதி எதிர்நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும், அதற்கான தோராய செலவினம் ரூ.53,371/-யினை பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 845/2023/இ1)

**தீர்மானம் எண்.441** **நாள். 31.08.2023**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

<u>பொருள் எண்.7</u>

அரக்கோணம் நகராட்சி பகுதிகளில் உள்ள நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் 2021–2022 ஆம் ஆண்டிற்கு கழிப்பறை சுத்தம் செய்தல் மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் (Outsourcing) 14 தற்காலிக பணியாளர்களை வைத்து பணியில் ஈடுபடுத்த 01.02.2021 முதல் 16.02.2022 வரை பணி உத்திரவு வழங்கப்பட்டு, மேற்காணும் பணி உத்திரவு 16.02.2022 முடிவடைந்துள்ளது. அதனை தொடர்ந்து பள்ளி மாணவர்களின் பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் மூலம் 17.02.2022 முதல் 31.05.2023 வரை ஏற்கனவே அளித்துள்ள விலைப்புள்ளி விகிதத்திலே பணியினை மேற்கொள்ள நகரமன்ற அனுமதியுடன் தொடர் நீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது பணி நீட்டிப்பு காலம் முடிவடையும் நிலையில் உள்ளதால் பணியின் அவசரம் அவசியம் கருதி பணி நீட்டிப்பு காலத்தை 01.06.2023 முதல் 30.09.2023 வரை நான்கு மாதங்களுக்கு ஏற்கனவே வழங்கி வரும் அதே தொகையில் அந்நிறுவனத்திற்கு நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்கான செலவின தொகை ரூ.4.70 இலட்சத்தினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகர மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டதை நகர மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு நகர மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.483/2023/எச்1)

**தீர்மானம் எண்.442** **நாள். 31.08.2023**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

<u>பொருள் எண். 08</u>

<u>நகரமன்ற துணைத் தலைவர் திருமதி.கலாவதி அன்புலாரன்ஸ், அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்</u>

1) வார்டு எண். 10 லாசர் தெரு, நன்னுமியான் தெரு, சிவராஜ் தெரு, அந்தோணியர் தெரு, மஸ்தான் தர்கா தெரு ஆகிய தெருக்களுக்கு சிறுபாலம் அமைத்து தரக்கோருதல்,
2) சிவராஜ் தெரு தொடர்ச்சி கடைசி, சிவராஜ் தெரு வடதுபக்கம் விடுபட்ட தெரு மற்றும் லாசர் பிக்னிக் லாட்ஜ் சிறிய சந்து தெருக்களில் சிமெண்ட் சாலை அமைத்து தரக்கோருதல்.
3) வார்டு எண். 10 லாசர் தெரு, துலுக்கானத்தம்மன் தெரு, அந்தோணியர் தெரு, சிவராஜ் தெரு, நன்னுமியான் தெரு, மஸ்தான் தர்கா தெரு ஆகிய தெருக்களில் பழுதடைந்துள்ள மழைநீர் கால்வாய்களை சீரமைத்து 'தரக்கோருதல்.
4) வார்டு எண். 10–க்குட்பட்ட குடியிருப்பு பகுதிகளில் சிசிடிவி கேமரா பொருத்தி தரக்கோருதல்.

5) வார்டு எண்.10–க்குட்பட்ட தெருக்களில் தெரு பெயர் பலகை வைத்து தரக்கோருதல்.

**தீர்மானம் எண்.443** **நாள். 31.08.2023**

அலுவலக குறிப்பு :– நகரமன்ற கூட்டத்தில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டது நிதி நிலைமைக்குகேற்ப மேற்படி பணிகள் செய்திட மன்றத்தில் தீர்மானிக்கப்பட்டது,

**பொருள் எண். 09**

8–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.பிரியதர்ஷினி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

8வது வார்டில் வார்டு சி, பிளாக் – 11, நகரளவு எண்.40 என்ற இடத்தில் 39812 சமீ பரப்பில் கழிவுநீர்சுத்திகரிப்பு செய்யும் இடம் உள்ளது. அவ்விடத்தில் கூடுதலாக காலியிடம் உள்ளதால் பூங்கா (சிறுவர் விளையாட்டு பூங்கா) அமைக்க கோருதல்.

8வது வார்டில் வார்டு சி, பிளாக் –13 நகரளவு எண்.21 என்ற இடத்தில் 4352 சமீ பரப்பில் நகராட்சி இடத்தில் பூங்கா அமைக்க இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதிக மக்கள் தொகை உள்ள இவ்விடத்தில் பூங்கா அமைக்க கோருதல்.

**தீர்மானம் எண்.444** **நாள். 31.08.2023**

அலுவலக குறிப்பு :– நகரமன்ற கூட்டத்தில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டது நிதி நிலைமைக்குகேற்ப மேற்படி பணிகள் செய்திட மன்றத்தில் தீர்மானிக்கப்பட்டது,

**பொருள் எண். 10**

28–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.S.ராஜலட்சுமி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

28–வது வார்டில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு குடிநீர் இணைப்பு அமைத்து தரக்கோருதல்.

**தீர்மானம் எண்.445** **நாள். 31.08.2023**

அலுவலக குறிப்பு :– நகரமன்ற கூட்டத்தில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டது நிதி நிலைமைக்குகேற்ப மேற்படி பணிகள் செய்திட மன்றத்தில் தீர்மானிக்கப்பட்டது,

**பொருள் எண். 11**

29–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.P.நந்தாதேவி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) 29வது வார்டில் உள்ள ஏ.என். கண்டிகை 2வது தெருவில் உள்ளகைபம்பினை அகற்றிவிட்டு மின்மோட்டாருடன் கூடிய குடிநீர் தொட்டி அமைக்கவும் மற்றும் இலட்சுமணன் நகர் பகுதியில் உள்ள கைபம்பினை அகற்றி மின்மோட்டாருடன் கூடிய குடிநீர் தொட்டி அமைத்து தரக்கோருதல்.

2) 29வது வார்டு பகுதியில் புதியதாக போடப்பட்டுள்ள சாலையில் ஒரு சாலையுடன் மற்றொரு சாலை இணையும் பகுதியில் மேடுபள்ளமாக விடுபட்டுள்ளதை சரி

செய்யக்கோருதல்.

**தீர்மானம் எண்.446** **நாள். 31.08.2023**

அலுவலக குறிப்பு :- நகரமன்ற கூட்டத்தில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டது நிதி நிலைமைக்குகேற்ப மேற்படி பணிகள் செய்திட மன்றத்தில் தீர்மானிக்கப்பட்டது,

(திருமதி.லட்சுமி பாரி)
நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி

**கூட்டத்தின் போது கொண்டு வரப்பட்ட மன்றப்பொருள் 29-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.P.நந்தாதேவி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

உண்டி கொடுத்தோர் ! உயிர் கொடுத்தாரே !! என மணிமேகலை காட்டும் வழியில் நம் கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களின் காலை உணவு திட்டம் மூலம் 17 லட்சம் மாணவர்கள் பயன்பெறுகின்றனர். மாணவர்கள் நல்ல உடல் நலத்துடன் திகழும், பணியாற்ற ஆரோக்கியமான மாணவர் சமுதாயம் உருவாகவும், மாணவர்கள் கற்றல் திறனை மேம்படுத்தவும் முடியும் என அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 12 பள்ளியில் பயிலும் மாணவ செல்வங்கள் காலை உணவு திட்டத்தின் விரிவாக்கத்தினால் பயன்பெற்றுள்ளனர், பள்ளி கல்வியில் ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ள முதல்வர் காலை உணவு திட்டத்தை விரிவாக்கிய தாய் உள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நகர மக்கள் சார்பாகவும், நகர மன்றத்தின் சார்பாகவும் நன்றியும் வாழ்த்துக்களையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றி தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.446** நாள். 31.08.2023

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் தீர்மானிக்கப்பட்டது,**

(ஒம்)/-திருமதி.லட்சுமி பாரி,
நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி

**// உண்மை நகல் //**

ஆணையர்
அரக்கோணம் நகராட்சி.